| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>லெட்சுமணன் | அ.வ.எண். 316/2020 | 27.01.2025 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

13) வாதி கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் தவறானது என்று எனக்கு எப்போது தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தெரியும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தகப்பனார் பாலசுப்ரமணியன், நல்லுசாமி வாதி வேணுகோபால், சுப்ரமணியர் ஆகியோர் பெயர் கூட்டாக உள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறானதாகும். வேணுகோபால் பெயர் வராது. மேற்படி வா,.சா.ஆ.2 ல் பெயர் தவறாக வந்த விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு மேற்படி விபரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 பட்டாவில் பெயர் தவறாக உள்ளது என்று நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வேணுகோபால் கிரையம் பெற்ற சொத்து தாவா புல எண்ணில் இல்லை என்று தான் நாங்கள் கட்சி செய்து வருகிறோம். மேற்படி வேணுகோபாலின் சொத்து எங்கு உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பாடாலூர் மெயின் ரோட்டிற்கு கிழக்கே தாவா சொத்து சுப்ரமணியன், பாலசுப்ரமணியன் மற்றும் நல்லுசாமி பெயரில் கூட்டாக உள்ளது என்றால் சரிதான்.

14) எனது தகப்பனார் பெயரில் பாடாலூர் மெயின் ரோட்டிற்கு மேற்கே வேறு சர்வே எண்ணில் சுப்ரமணியன், பாலசுப்ரமணியன் மற்றும் நல்லுசாமி பெயரில் கூட்டாக சொத்து உள்ளதா என்றால் இல்லை, தனித்தனிப்பட்டாவாக தான் இருந்தது. மேற்படி சொத்துக்களை பொறுத்து சர்வே எண் என்னவென்றால் எனக்கு தெரியாது. மேற்கில் உள்ள புல எண்ணில் சுப்ரமணியன் பாகத்தை எனது அண்ணன் கிரையம் வாங்கியுள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

15) மேற்படி சுப்ரமணியனிடம் எனது அண்ணன் 4 ஏக்கர் கிரையம் வாங்கியுள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொததில் எனது பாகத்தில் வீடு கட்டுவதற்கு முன்பாக எங்கு குடியிருந்தேன் என்றால் கீழத்தெருவில் குடியிருந்து வந்தேன், மேற்படி வீட்டின் கதவு எண். 1/28 ஆகும். எனது குடும்ப அட்டையில் மேற்படி கதவு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குடும்ப அட்டையை பார்த்தால் தான் தெரியும். தாவா சொத்து பாடாலூர் மெயின் ரோட்டில் தான் உள்ளது என்றால் சரிதான். வாதி வேணுகோபாலுக்கு விவசாய நிலங்கள் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவசாய நிலங்களுக்கு பாடாலூர் மெயின் ரோட்டின் வழியாக தான் சென்றுவருவாரா என்றால் சென்றுவருவார்.

16) தாவா சொத்தில் செப்டிக்டேங்க் கட்டுவதற்கு குழிபறித்த பணியார்கள் யார் என்றால் நானே குழிப்பறித்தேன். மேற்படி செப்டிக்டேங்க், கழிவறை ஆகியவற்றை கட்டிய கொத்தனார் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. மேற்படி கொத்தனாரை யார் அழைத்து வந்தார்கள் என்றால் பக்கத்து வீட்டுக்காரர் கொத்தனாரின் தொலைபேசி எண் கொடுத்தார்கள், அதன் மூலம் கொத்தனாரை அழைத்தேன். தாவா சொத்தில் பள்ளம் பறித்த போது தகராறு நடந்ததா என்றால் நடந்தது. மேற்படி தகராறு காரணமாக வேணுகோபால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் புகார் கொடுத்தார், காவல் நிலையத்தில் விசாரணை நடந்ததா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. மேற்படி அறிவிப்பு மற்றும் அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.9, 10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

17) எதற்காக மேற்படி அறிவிற்பிற்கு நான் பதில் கொடுக்கவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்தபிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன். தாவா சொத்தின் கீழ்புறத்தில் உள்ள எனது வீட்டின் அளவு எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. தாவா புல எண்ணில் எனது சொத்தை பொறுத்த அளவு எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது வீடு தென்வடல் 64 அடி ஆகும், கிழமேல் அளவு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. மேற்படி அளவை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் வீட்டில் தேடி பார்த்தால் தான் தெரியும்.

18) எனக்கும் வாதிக்கும் விரோதம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நல்லுசாமிக்கும் எனக்கும் சுமூகமான உறவு உள்ளதா என்றால் இல்லை விரோதம் உள்ளது. மேற்படி நல்லுசாமி தற்போது உயிருடன் இல்லை, அவரது மகன்களுடனும் எனக்கு விரோதம் உள்ளது. என்ன பிரச்சனை என்றால் வயக்காடு சம்மந்தமான பிரச்சனையாகும். நல்லூசாமி அவரது பாகத்தில் வீடு கட்டி 60 ஆண்டுகள் இருக்குமா என்றால் தெரியாது. மேற்படி நல்லுசாமி வீடு கட்டும் போது பாகம் பிரியாத சொத்தில் எதற்காக வீடு கட்டுகிறார் என்று கேட்டேனா என்றால் இல்லை. எனது பாகத்தில் வீடு கட்டும் போது நல்லுசாமி, சுப்ரமணி எதுவும் என்னிடம் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் மேற்குபுறத்தில் கழிவறை மற்றும் செப்டிக்டேங் கட்டப்பட்டுள்ள பகுதி எனக்கு சொந்தமானது என்பதை காட்ட ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் கட்டுமானம் கட்டிக்கொள்ளும்படி எனது அண்ணன் என்னிடம் சொன்னாரா என்றால் எனது தகப்பனார் தான் கட்டினார். வீடு கட்டியதும் எனது தகப்பனார் தான். மேற்படி எனது தகப்பனார் தான் வீடு, செப்டிக்டேங் மற்றும் கழிவறை ஆகியவற்றை

கட்டினார் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் இறந்து 10 ஆண்டுகள் இருக்கும். எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் என் கைவசம் உள்ளது என்றால்சரிதான்.

19) தாவா சொத்தை சுப்ரமணியன் வாதிக்கு விற்ற காரணத்தினால் தான் வாதிக்கும் எனது அண்ணனுக்கும் விரோதம் ஏற்பட்டதா என்றால் இல்லை. வாதி திருத்தல் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டு தான் 1,2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாதிகள் வாதியிடம் திருத்தல் பத்திரத்திற்கு பணம் கேட்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் மேற்கு புறம் ஓரமாக கட்டுமானம் கட்டுவதற்கு யார் யோசனை சொன்னார்கள் என்றால் எனது தகப்பனார் கட்டியதால் எனக்கு தெரியாது. கீழ்புற ஓரத்தில் உள்ள எனது வீட்டிற்கும், கழிவறை மற்றும் குளியலறை ஆகியவற்றிற்கு 22 அடி தூரம் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 வீட்டுவரி ரசீது மற்றும் பி.வா.சா.ஆ.5 குடிநீர் கட்டண ரசீது, பி.வா.சா.ஆ.6 மின்கட்டண வைப்பீடு ஆகும். பி.வா.சா.ஆ.6 2012 ல் வாங்கியது என்றால் சரிதான். பழைய வீட்டுவரி ரசீதுகள் எங்கு உள்ளது என்றால் வீட்டில் தான் உள்ளது. வாதியின் விற்பனையாளர் சுப்ரமணியனுக்கு தாவா புல எண்ணில் இடம் உள்ளது என்றால் சரிதான். மேறப்டி இடம் எனது சொத்திற்கு மேற்புறம் உள்ள இடம் என்றால்சரிதான்.

20) மேற்படி சுப்ரமணியன் வீட்டிற்கு வடக்கே சுப்பையா நாயுடு கூரை வீடு என்றால்சரிதான். மேற்கில் பாடாலூர் மெயின் ரோடு என்றால் சரிதான். தெற்கில் பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதையை நோக்கி தான் எனது வீட்டின் வாசற்படி அமைந்துள்ளது என்றால் சரிதான்.

தாவா புல எண்ணில் உள்ள சொத்தை எப்போது பிரித்து கொடுத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, எனது பூர்வீக சொத்தாகும். வாதிக்கும் எனக்கும் இடம் சம்மந்தமான பிரச்சனை மட்டும் தான் என்றால் சரிதான். எனது இடத்தில் வீடு கட்டிக்கொள்ளும்படி எனது தகப்பனாரிடம் யார் சொன்னார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

21) தாவா சொத்தில் உள்ள வீட்டை எனது பாகத்திற்கு என் குடும்பத்தார்கள் ஒதுக்கிவிட்டார்கள் என்றால் சரிதான். சுப்ரமணியன் பாகத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். தாவா புல எண்ணில் கழிவறை மற்றும் குளியலறை ஆகியவற்றை 2010 லேயே கட்டிவிட்டேன். மேற்படி விபரத்தை எனது எதிர்வழக்குரையில் குறிப்பிடாததற்கு என்ன காரணம் என்றால் அப்போது எனக்கு நினைவில் இல்லாததால் சொல்லவில்லை. தாவா புல எண்ணில் எனது பாகத்தில் வீடு கட்டும் போது சுப்ரமணியன் பாகத்தில் எந்தவித கட்டுமானமும் இல்லை என்றால் சரியல்ல. 20.10.2020 தேதியில் தான் தாவா சொத்தில் குளியலறை, கழிவறை ஆகியவற்றை சட்டவிரோதமாக கட்ட ஆரம்பித்தோம் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும் போது கட்டி முடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. வீடு கட்டுவதற்கான கட்டிட அனுமதியை நீதிமன்றத்தில்தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அனுமதி எதுவும் நாங்கள் எதுவும் பெறவில்லை.

22) வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண் தவறுதலாக உள்ளது என்பதை பயன்படுத்திக்கொண்டு நாங்கள் தாவா சொத்தை அபகரிப்பு செய்கிறோம் என்றால் சரியல்ல. நான்கெல்லைபடி தாவா சொத்தை தான் வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால்சரியல்ல. வாதி தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்ற காரணத்தினால் தான் வாதியின் மீது எந்த

நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டா முறையாக விசாரணை செய்து தல ஆய்வு நடத்தி தான் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி காரணத்தினால் தான் நான் பட்டா மீது எந்த மேல்நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.